DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.178/2019**

**CNR.No: TNTH06-000289-2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Town | இராயப்பன்பட்டி |
| Father's Name | : கோபால் | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :22.01.2025

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) வழக்கு கோவிலுக்கு கிழக்கே உள்ள தார் ரோடானது சர்வே எண். 2050/1 ல் அமைந்திருப்பதாக நான் சாட்சியம் அளித்திருப்பது தவறு என்றாலும், அந்த தார்ரோடானது சர்வே எண். 2048 ல் தான் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு கோவிலுக்கு கிழக்கே உள்ள தார்ரோட்டிற்கும், 4 ம் பிரதிவாதி பழனிவேல் இடத்திற்கும், இடைப்பட்ட பகுதி சர்வே எண். 2048 சொத்து என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதி பழனிவேல் தாக்கல் செய்த அசல் வழக்கு 204/2010 வழக்கில் தார்ரோட்டிலிருந்து அவரது இடத்திற்கு செல்வதற்கு சர்வே எண். 2048 வழியாக மட்டுமே பாதை இருப்பதாகவும், அதனை மறைத்து அந்த இடத்தில் கட்டிடம் கட்ட முயற்சிப்பதாகவும் அதனை ஆட்சேபித்து சுருளிப்பட்டி பஞ்சாயத்து போர்டிற்கு எதிராக பரிகாரம் கோரியிருந்தார் என்றால் சரிதான்.

2) அந்த வழக்கில் 4 ம் பிரதிவாதி சர்வே எண். 2048 சொத்தில் எந்த பகுதியின் வழியாகவும் அவரது நிலத்திற்கு சென்று வர உரிமை உள்ளது என கோரியிருந்த பரிகாரத்தை இந்நீதிமன்றமானது அனுமதித்து உத்தரவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பினை எதிர்த்து உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் முதல்மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2014 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல்மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2014 சார்பு

நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், 2019 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.

3) 2007 ம் ஆண்டில் சுருளிநீர்வீழ்ச்சி தொடர்புடைய வழக்கு சர்வே எண். 2048 ற்குரிய பகுதிகளில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு, அங்கிருந்த வட்டக்கோவில் இடிக்கப்பட்டது என்றாலும் பின்னர், தார்ரோட்டிற்கும், 4 ம் பிரதிவாதி இடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் பஞ்சாயத்து போர்டால் சமுதாயக்கூடம் கட்ட டெண்டர் விடப்பட்டது என்றாலும், அதனை ஆட்சேபித்துத்தான் 4 ம் பிரதிவாதி அசல் வழக்கு எண். 204/2010 வழக்கினை தாக்கல் செய்தார் என்றாலும் சரிதான். அவ்வாறு, 2007 ம் ஆண்டில் வட்டக்கோவில் இடிக்கப்பட்டதால் தான் அப்போது அக்கோவிலில் நிர்வாகியிருந்த ரங்கநாயகியம்மாள் அந்த கோவிலை விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றால் அது சரியல்ல.

4) 2007 ம் ஆண்டில் ரங்கநாயகியம்மாள் விட்டுவிட்டு சென்றதை நான் சாதகமாக பயன்படுத்தி நன்கொடை வசூல் செய்து 2010 ஆண்டிற்கு பிறகு அச்சொத்தில் புதிதாக கட்டிடம் கட்டியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2010–ம் ஆண்டிற்கு பிறகு தான் வழக்கு சொத்தில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல, 2007 ம் ஆண்டிலேயே ரங்கநாயகியம்மாள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரைக்கிளையில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளார், 2010 ம் ஆண்டிற்கு பிறகு கட்டிடம் புனர் அமைக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் ரங்கநாயகியம்மாள் 2007 ம் வருடத்தில் வழக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஆமாம், சொல்லவில்லை.

5) தற்போது வழக்கு சொத்தில் உள்ள கட்டிடம் யாரால் கட்டப்பட்டது என்றால் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சேர்ந்து கட்டப்பட்டது. எனது வழக்குரையில் 2010 ம் ஆண்டு முதல் பொதுமக்களிடம் வசூல் செய்து 2017 ம்

ஆண்டில் வழக்கு கோவில் கட்டிடத்தை கட்டி முடித்து என்னால் கும்பாபிசேகம் செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் போது நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் WP.No.7099/2018 வழக்கினை தாக்கல் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் ஆக்கிரமிப்பினை அகற்றம் செய்வதற்காக 3 நாட்கள் காலஅவகாசம் அளித்து வழங்கிய நோட்டீசை எதிர்த்து தாக்கல் செய்தேன்.

6) அவ்வாறு, ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் அளித்த நோட்டீசில் நான் ஆக்கிரமிப்பு செய்து வழக்கு கோவிலை கட்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது என்றால் ஆமாம், அவ்வாறு தான் அதில் சொல்லப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள நீதிபேராணை மனுவானது மேற்படி நோட்டீஸ் வழங்கப்பட்டது தவறு என்று ஆட்சேபித்து தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நீதிபேராணை மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் இரண்டு வார கால அவகாசம் மனுதாரர் ஆகிய எனக்கும், ஆணையருக்கு 8 வார கால அவகாசம் வழங்கியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இரண்டு வார கால அவகாசம் எனக்கு எதற்காக வழங்கப்பட்டது என்றால் கோவில் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டது.

7) நான் அதுபோன்று கோவில் தொடர்பான ஆவணங்களை ஊரக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் சமர்ப்பித்தேனா என்றால் சமர்ப்பித்தேன், இது தொடர்பாக அவசர குறிப்பாணை தபால் எனக்கு அனுப்பப்பட்டது. ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் நான் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு எதுவும் பிறப்பித்தாரா என்றால் உத்தரவு பிறப்பிக்கவில்லை. நான் கூறுவதுபோல ஊரக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கோவில் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்ததாக கூறுவதை நிரூபிக்க ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது, அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கிறேன். நீதிபேராணை மனுவில் மாண்புமிகு உயர்நீதிமன்ற பிறப்பித்த உத்தரவில் கோவில் தொடர்பாக ஆவணங்களை சமர்ப்பிக்க

எனக்கு இரண்டு வாரம் கால அவகாசம் அளித்து அதனைப்பொறுத்த தீர்மானித்து உத்தரவிட ஊரக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு 8 வாரம் கால அவகாசம் அளித்து மட்டுமே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும், வழக்கு சொத்தின் உரிமை தொடர்பாக அந்த நீதிபேராணை மனுவில் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

8) 4 ம் பிரதிவாதி விசாரித்ததன் அடிப்படையில் நான் நீதி பேராணை மனு உத்தரவின் படி ஊரக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கோவில் தொடர்பான ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்றாலும் அதனைப்பொறுத்து ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல, நான் ஆவணங்களை சமர்ப்பித்தேன். நீதிபேராணை மனு WP.No.7099/2018 மனுவில் 11.06.2019 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு, நீதிபேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி நடக்காமல் வழக்கு கோவிலை இடித்து விடாமல் தடுப்பதற்காக 13.09.2019 அன்று இந்த அசல் வழக்கினை நான் பின்யோசனை செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு கோவிலானது அரசுக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமித்து கட்டப்பட்டது என்றாலும், அதன்படி நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.